**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**O.S. 60/2022**

**வாதி தரப்பு சாட்சியாகிய PW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. விஜய் ஆனந்த், B.E., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **ராமச்சந்திரன்** | **தாலுக்கா** | : | **திருவாரூர்** |
| **த/பெ** | : | **வெங்கடாச்சலம்** | **கிராமம்** | : | **கூட்டுறவுநகர், திருவாரூர்.** |
| **ஜாதி** | : | **யாதவர்** | **தொழில்** | : | **விவசாயம்** |
| **சமயம்** | : | **இந்து** | **வயது** | : | **65** |

**முதல் விசாரணை**

நான் இந்த அசல் வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(கடந்த 14.06.1990 ல் தாவா 1 வது அயிட்ட சொத்தை நான் கிரயம் பெற்றதற்கான கிரயப்பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 15.03.2006 ஆம் தேதியிட்டு தாவா 2 வது அயிட்ட சொத்தை நான் கிரயம் பெற்றதற்கான கிரயப்பத்திரம் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (தாவா சொத்திற்கான நில உரிமை விபரம் கணினி நகல் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 01.01.1987 ஆண்டு முதல் 08.10.2022 ஆம் தேதி**

**வரையிலான காலத்திற்கான தாவா சொத்திற்கான வில்லங்க சான்று கணினி நகல் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 2020 – 2021, 2022 – 2023 ஆகிய வருடங்களுக்கான கிராம நிர்வாக அலுவலர் திருக்காரவாசல் அவர்களால் வழங்கப்பட்ட சான்று நகல் தாக்கல் செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.